UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2011**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

*0908242439*

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

DC (NH/CGW) 35013/4
© UCLES 2011

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

**[Turn over**

**BLANK PAGE**

© UCLES 2011

## Section A – Translation

**1** Translate into **English**.

ஹரி தினமும் பள்ளிக்கூடத்திற்கு சைக்கிளில் போகும்போது, அவனுடைய மற்ற நண்பர்கள் எல்லாரும் நடந்து போவார்கள். அவனுக்கும் அவனுடைய நெருங்கிய நண்பன் ரவிக்கும் பதினொன்றாவது பிறந்த நாளுக்கு சைக்கிள் பரிசாகக் கிடைத்தது. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, இருவரும் பள்ளிக்கூடத்திற்கு சைக்கிளில் போக ஆரம்பித்தார்கள். ஹரி மேட்டில் ஏறுகிற இடத்தில் போக விரும்பினான். பிறகு மறுபக்கம் கீழே வரும்போது பெடலில் இருந்து அவன் கால்களை எடுத்து விட்டு வேகமாக வந்தான். மேட்டின் அடிவாரத்தில் ரவி வருவதற்குக் காத்துக் கொண்டிருப்பான். பிறகு இருவரும் சேர்ந்து போவார்கள். போகும்போது கடைசி பத்து நிமிஷங்களில் நண்பர்களைக் கடந்து அல்லது பார்த்துக் கொண்டு போவார்கள். நண்பர்கள் அடிக்கடி தங்கள் பைகளை சைக்கிளின் கைப்பிடியில் மாட்டிக் கொண்டு போகும்படி கேட்பார்கள். ஆனால் ஹரியும் ரவியும் சிரித்துக் கொண்டே சைக்கிளில் போய் விடுவார்கள். பகலில் என்ன நடந்தாலும் சரி, பள்ளிக்கூடத்திற்குப் போகும் போதும் வரும்போதும் சிரித்துக் கொண்டே இருப்பார்கள்.

[10]

**2** Translate into **Tamil**.

Mahesh was feeling nervous before his long flight and he had not been able to sleep for the last three nights. He woke early on the day of his flight, knowing that there was still an hour before he had to leave for the airport. He still had a few things to pack, and had to find a lock for the suitcase.

After breakfast, he packed his toothbrush and comb and closed the suitcase. Suddenly, he remembered that he had not packed his coat. The suitcase was getting very full, and he wondered how his big coat was going to fit inside.

Mahesh did his best to close the suitcase, and even sat on it. Then he heard a strange cracking sound and he saw that he had broken it. He panicked as he did not have another suitcase. He knew that the shops would not be open at this time in the morning, so he ran to his neighbour's house and knocked on the door, but there was no answer.

Desperately, he phoned his friend Sanjeevan, and luckily he did have a spare suitcase. Mahesh jumped into his car and drove the twenty minute journey to his friend's house, picked up the suitcase and returned home. He emptied all of his items into the new case, locked it, threw it into the boot of his car and rushed to the airport to catch his plane.

Unfortunately, the flight was cancelled due to bad weather.

[20]

© UCLES 2011

## Section B – Reading Comprehension

Read the following passage carefully and then answer the questions in **Tamil**.

நர்ஸரி வகுப்பில் இருந்த குழந்தைகள் மிகவும் ஆவலுடன் இருந்தனர். அவர்கள் முதன் முதலாக தங்கள் பெற்றோர், சகோதரர், சகோதரிகளுக்கு முன்னால் ஒரு நாடகம் போடப் போகிறார்கள். மிருகக்காட்சிசாலையில் உள்ள மிருகங்கள் எல்லாம் சேர்ந்து யார் மிகவும் புத்திசாலி என்று காட்டப்படும் ஒரு கதையாகும். முப்பது குழந்தைகளும் இதில் பங்கு பெற்றனர். சிலருக்குப் பேச வேண்டிய பாகம் இருந்தது. மற்றவர்களுக்கு எந்த மிருகத்தின் பாகம் கொடுத்து இருந்தார்களோ, அதே மாதிரி நடனம் ஆடி நடிக்க வேண்டும். ஆசிரியர்களும் அவர்களுக்கு உதவி செய்பவர்களும் காலை முழுவதும் குழந்தைகளின் உடுப்புகளை பிரித்துப் பிரித்துப் பெட்டிகளில் போட்டு, குழந்தைகளின் பெயரை எழுதி வைத்தனர். முந்தின வாரம் குழந்தைகள் எல்லாரும் மிருகங்களின் முகமூடிகளையும், சிங்கம், புலி, குரங்கு, ஒட்டகச்சிவிங்கியின் படங்களையும் வரைந்தனர்.

ஆசிரியர் நாடகத்திற்கு வேண்டிய கருப்புநிறக் கால்சட்டையும் கருப்பு நிற மேல்சட்டையும் கொண்டு வரச் சொல்லி குழந்தைகளிடம் கூறினார். கிட்டத்தட்ட எல்லாரும் கொண்டு வந்தனர். ஆசிரியர் 2,3, அதிகப்படியாக உடுப்புகள் வைத்து இருந்தார். எல்லாம் சரியாக இருந்தும், நாடகம் நடக்கும் நேரம் நெருங்க ஆசிரியர் மிகவும் கவலையுடன் இருந்தார். குழந்தைகளை மத்தியானம் சீக்கிரம் சாப்பிடச் சொல்லி. கொஞ்ச நேரம் வெளியில் விளையாடச் சொன்னார். ஏனென்றால் பிறகு குழந்தைகள் உள்ளே வந்து நாடகத்திற்கு வேண்டிய உடுப்புகளை மாற்றி முகமூடிகள் போட்டுக்கொள்ள வேண்டும். முன்னால் சந்தேகப்பட்டபடியே, மூன்று பையன்கள் இதை மறந்து விட்டனர். மற்ற குழந்தைகள் உள்ளே வந்து, தயார் ஆகலாமா என்று கேட்கும்போது, ஆசிரியர் வராத பையன்களைத் தேடிக் கொண்டு போனார். அவர்கள் வெளியே கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆசிரியர் உள்ளே திரும்பி வரும்போது இரண்டு பெண்கள் முகமூடி யாருடையது என்று விவாதம் செய்து கொண்டு இருந்தார்கள். சில கால்சட்டைகள் மாறி இருந்தது போல் தோன்றியது. ஒரு பையன் இரண்டு அளவுக்குப் பெரியதாக ஒரு கால்சட்டை போட்டுக் கொண்டிருந்தான். உதவி செய்பவர் இந்தப் பையனுக்கு சிறிய அளவு கால்சட்டை தேடிக் கொண்டு இருந்தார். ஆசிரியர் உள்ளே கூட்டிக்கொண்டு வந்த மூன்று பையன்களையும் நல்ல மாதிரியாக இருக்கச் சொல்லி அதட்டிவிட்டு. உடைகளை மாற்றச் சொன்னார். இப்பொழுது பெற்றோர்கள் உறவினர்கள் வந்து சிறிய பள்ளிக்கூட ஹாலில் பின்னால் உட்கார ஆரம்பித்தனர்.

தனித்தனியாக குழந்தைகள் தயார் ஆன பிறகு, ஆசிரியர் அவர்களை மேடையில் ஏறுவதற்கு சத்தம் போடாமல் வரிசையாக வந்து நிற்கச் சொன்னார். ஆசிரியர் தன் ஒரு விரலை உதட்டில் வைத்துக்கொண்டு குழந்தைகளைத் தன் பின்னால் சத்தம் போடாமல் வரச் சொன்னார். ஹாலின் பின்னால் நின்று கொண்டு மேடையைப் பார்த்து கையை ஆட்டிவிட்டு, மௌனமாகப் பிரார்த்தனை செய்தார், ஒரு குழந்தை மேலே ஏறும்போது அவள் கையில் இருந்த பேப்பர் கீழே விழுந்தது. பிறகு பின்னால் வந்தவரோடு மோதிக்கொண்டாள்.

இப்படிப் பல பிரச்சனைகள் இருந்தும் குழந்தைகள் நன்றாகச் செய்தனர். எல்லாரும் தங்கள் வரிகளை மறக்காமல் சொல்லி நடனம் ஆடி நன்றாகச் செய்தனர். கடைசியில் முடியும் போது வகுப்புக் குழந்தைகளுடன் ஆசிரியரும் மேடைக்கு வந்தார். அப்பொழுது எல்லாரும் எழுந்து நின்று கை தட்டினார்கள். காட்சி முடிந்தது பற்றி ஆசிரியர் மிகவும் சந்தோஷம் அடைந்தார்.

© UCLES 2011

Now answer the following questions in **Tamil** using your own words as far as possible.

3 குழந்தைகள் என்ன கதையை நாடகமாகச் செய்யப் போகிறார்கள்? [1]

4 நாடகத்தைத் தயார் செய்வதற்குக் குழந்தைகள் என்ன என்ன செய்தனர்? [2]

5 குழந்தைகள் நாடகத்திற்கு என்ன மாதிரி உடைகள் அணிந்தனர்? [2]

6 ஏன் குழந்தைகள் குறைந்த நேரம் விளையாட்டு மைதானத்தில் இருந்தனர்? [1]

7 நாடகத்திற்கு முன்னால் தவறாக நடந்த மூன்று சம்பவங்களைக் கூறவும். [3]

8 ஆசிரியர் ஏன் மௌனமாகப் பிரார்த்தனை செய்தார் என்று நீ நினைக்கிறாய்? [2]

9 இந்தப் பத்தியில் எந்த சம்பவங்கள் ஆசிரியர் நன்றாக வேலை செய்தார் என்று கூறுகின்றன? [3]

10 மேடையில் நுழையும் போது குழந்தைகள் எப்படி நடந்து கொண்டார்கள்? [2]

11 ரசிகர்களின் ஆதரவு இந்த நாடகத்திற்கு எப்படி இருந்தது? [1]

12 ஆசிரியர் எல்லாம் முடிந்தபிறகு ஏன் மகிழ்ச்சியாக இருந்தார் என்று நீ நினைக்கிறாய்? [3]

Language and spelling [5]

**Total Marks [25]**

**BLANK PAGE**

**BLANK PAGE**

© UCLES 2011

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.